திற்கு மிக்க நன்மையைச் செய்கின்றன. நீரில் உள்ள ஒட்டுல்லண்ணி வகைகளும், உயிரினங்களையும், தெளிந்த நீர் நிலை மீன்களையும், மலேரியா போன்ற தொத்து நோய் உண்டாக்கும் கிருமிகளை பரப்பும் கொசு முட்டைகளையும், லார்வாக்களையும் உண்பதன் மூலமாக தொத்து நோய்கள் மனிதனிடையே பரவாமல் தவளைகள் தடுக்கின்றன. தவளைக் கால்களைத் தனியார் துறை வியாபாரிகள் ஏற்றுமதி செய்வதன் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 11 கோடி அன்னியச் செலாவணி நமக்கு கிடைக்கிறது. தவளைச் கால்கள், மருந்துக்கும், உணவிற்கும் அயல் நாடுகளில் பயன்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளாக கிடைக்கப்பெற்ற புள்ளிவிவரப்படி 3,000 டன்கள் தவளைக் கால்கள் ஏற்றுமதியாகி இருக்கின்றன. 9,000 டன்கள் அதாவது 200 மில்லியன் தவளைகள் நம்நாட்டில் பிடிக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்களுக்கும், நெல் மற்றும் தென்னை போன்ற பயிர்களுக்கும் சேதம் விளைவிக்கும் புழு பூச்சிகளை இந்தத் தவளைகள் உண்கின்றன என்று இந்தக் கேள்வியின் ஆரம்பத்தில் சொன்னேன். அன்னியச் செலாவணி 11 கோடி ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன் வளர்க்கின்ற குளங்கள் தனியாருக்கு விடப்படுகின்றனவா ? அப்படி விடப்படுகின்றன என்றால் அதிலே எவ்வளவு பரப்பளவு மீன் குளங்கள் விடப்படுகின்றன? அப்படிப்பட்ட குளங்களில் மீன்விட அவர்களுக்கு ஏதாவது கடன் உதவி வழங்கப்படுகிறதா. அப்படி வழங்கப்பட்டால் அதிலே உற்பத்தியாகின்ற மீன்கள் எவ்வளவு ? வேறு ஏதாவது பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றனவா ? தனியார்களுக்கு எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியை மனதிலே வைத்துக் கேட்கிறார் என்று கருதுகிறேன். இது தவளை, நண்டு தனியார் ஏற்றுமதி பற்றிய கேள்வியாகும்.

மீன் வளர் போர் மேம்பாட்டு நிறுவனம்

**694.—(* வினா எண். 7061) திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக மத்திய அரசு ஒதுக்கி உள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம். புதியதாக ஏற்படுத்தப்பட்ட காமராஜர் மற்றும் அண்ணா மாவட்டங்களில, மத்திய அரசின் நிதியுதவியுடன் இரண்டு புதிய மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் நிறுவுவதற்கு கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) மத்திய அரசின் அங்கீகாரமும், நிதியுதவியும் எதிர்பார்க்கப்படுகிறது.

பனைமரங்கள் அழிக்கப்படுவதற்குத் தடை

695—(*வினா எண், 8989) திரு, எப், எம், இராசரத்தினம் மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயன்தரும் நிலையில் உள்ள பனைமரங்கள் அழிப்பதைத் தடைசெய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) இல்லை

ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

(முற்பகல் 9—50)

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைமரங்களில் பதனீர் இறக்குகிற பணியைச் செய்பவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருகிறது. பனை மரங்களை வைத்திருக்கின்ற தனியார் உடமையாளர்களுக்கு நல்ல பலன் கிடைக்காத காரணத்தாலே விறகுக்கும் மற்றும் பல்வேறு தேவைகளுக்கும் பனைமரங்கள் பெரும்பான்மையாக அழிக்கப்பட்டு வருகின்றன. இப்படியே போனால் இன்னும் 50 அல்லது 100 ஆண்டுகளில் பனைமரங்களையே பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு பயன் தரும் நிலையில் உள்ள இந்தப் பனைமரங்களை அழிக்கக்கூடாது, வெட்டக் கூடாது என்று சுற்றறிக்கை ஏதேனும் வெளியிட, ஆணை வெளியிட அரசு அறிவுறுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களை, பச்சை மரங்கள் உட்பட பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு